# தமிழ் அகதிகளுக்கென பெருமளவு உதவிபொருள்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE·EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 12 இதழ் 349
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 25 — 01 — 1993

## அரசிடம் கையளிப்பு

(லண்டன்)
வடக்கு-கிழக்குப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உலர் உணவு வழங்குவதற்கென பெருமளவு உதவிகள் சிறிலங்கா அரசுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஐ. நா. உணவு உதவி நிறுவனம் 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியையும், சீனியையும் மிக விரைவில்

(4-ம் பக்கம் பார்க்க)

## "தமிழர் துன்பநிலைகண்டு மிகவும் வேதனைப்படுகிறோம்"

(மட்டக்களப்பு)
மட்டு. மாவட்டத்தில் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்களைக் கண்டு மிகவும் வேதனைப்பட்டு கிறோம் என்று மட்டக்களப்பிற்கு விஜயம் செய்துள்ள டென்மார்க் மனித உரிமைக் குழு தெரிவித்துள்ளது.

மட்டு. மாவட்டத்தில் மனித உரிமைகள் எவ்வாறு

(4-ம் பக்கம் பார்க்க)

# திருமலைபகுதியில்கண்ணிவெடி

# அதிகாரி உட்பட 14 ராணுவம் பலி

(கொழும்பு)
திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் நேற்று பிற்பகல் நடாத்திய கண்ணி வெடித்தாக்குதலொன்றில் உயர்அதிகாரி உட்பட 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத்தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

நேற்று பிற்பகல் திருமலை மாவட்டத்திலுள்ள சிற்றூறு பகுதியில் ரோந்துவந்த ராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் சிக்கியதில் அதிகாரி உட்பட 14 இராணுவத்தினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளரை மேற்கோள் காட்டி லங்கா புவத் தெரிவித்தது.

இச்சம்பவத்தில் இராணுவத்தினர் வசமிருந்த ஆயுதங்களும் விடுதலை புலிகளால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## 80 தமிழ் இளைஞர்கள் மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு எருவில் மற்றும் களுதாவளைப்பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் 80 தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டனர்.

எருவில் கிராமத்தில் நடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சுற்றிவளைப்பில் 50 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை களுவாஞ்சிக்குடிக்கருகிலுள்ள களுதாவளைப்பகுதியில் நடந்த புதன்கிழமை இடம் பெற்ற சுற்றிவளைப்பில் 30 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

(ரி)

## சுப்பர்சொனிக் விமானம் அதிகாலையில் 'அச்சுறுத்தல்'

(யாழ்ப்பாணம்)
யாழ் குடாப்பகுதியை நேற்று அதிகாலை வேளையில் சுப்பர் சொனிக் விமானம் பேரிரைச்சலுடன் வட்டமிட்டு ஆழ்ந்த நித்திரையிலிருந்த மக்களை அச்சுறுத்திவிட்டுச் சென்றது.

அதிகாலை 2.30 மணியளவில் இருதடவை யாழ். குடாப் பகுதியை நோக்கி பேரிரைச்சலுடன் வட்டமிட்டதுடன் நித்திரையில் இருந்த மக்கள் தாக்குதல் ஏதேனும் இடம் பெறலாம் என்று அச்சமடைந்தனர்.

இதேவேளை காலை 5 மணியளவிலும் சுப்பர் சொனிக் விமானம் ஒன்று வட்டுக்கோட்டைப் பகுதியை நோட்டமிட்டுச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

(56-139-சி)

## 60,000 பேர் பலி

(யாழ்ப்பாணம்)
1983ம் ஆண்டு தொடக்கம் 1990ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களினால் ஈழத்தில் அறுபதினாயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். அல்லது காணாமல்போயுள்ளனர் என சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(159)

## கிட்டு இறந்த செய்தியை இந்தியா திரித்துக் கூறியது

(லண்டன்)
கேணல் கிட்டு இறந்த செய்தியை உலகிற்கு திரித்துக் கூறுவதில் இந்தியா முன்னின்றதோ என பி. பி. சி தனதுசெய்திக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

முதலில் கிட்டு வந்த கப்பல் கடலில் மூழ்கிவிட்டதுஎன்றும் இந்தச் செய்தியைக் கூட இந்தியா 24 மணி நேரத்துக்கு பின்புதான் அறிவித்தது என்று பி.பி.சி மேலும் தெரிவித்தது.

## கிட்டு புறப்பட்டு வந்த கப்பலை 'றோ' மிகத் தீவிரமாக அவதானித்து வந்ததாம்

(புதுடில்லி)
சமாதானத் திட்டத்துடன் தளபதி கிட்டு 'எம்.வி. அகத்' கப்பலில் புறப்பட்ட நேரம் முதல் 'இந்திய உளவுப்பிரிவு' இந்தக் கப்பலைத் தீவிரமாக அவதானித்து வந்ததாக இந்திய தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி 'எம். வி. அகத்' கப்பல் சிங்கப்பூரிலிருந்து டிசம்பர் 7ம் திகதி புறப்பட்டதாகவும் புறப்பட்ட நாளிலிருந்து இதன் நடமாட்டத்தை இந்திய உளவுப்பிரிவு கண்காணித்து வந்ததாம்.

திரு. கிட்டு ஜனவரி 7ம் திகதி சிங்கப்பூரிலிருந்து 100 மைல் தொலைவில் நின்ற இந்

(4-ம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புக்களை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமிலிருந்தும், மாதகல் முகாமிலிருந்தும் இராணுவத்தினர் நேற்று அதிகாலை குடியிருப்பு பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பலாலியிலிருந்து ஏழாலைப் பகுதியை நோக்கி நேற்று அதிகாலை 3-30 மணியளவில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இப்பகுதியை நோக்கி கடுமையான துப்பாக்கிப்பிரயோகமும் மேற்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி—பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று 25-ம் திகதி திங்கட்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

## நோர்வே குழு மட்டு. விஜயம்

(மட்டுநகர்)
நோர்வே அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று இம்மாதம் 27-ம் திகதி மட்டு நகருக்கு விஜயம் செய்யவுள்ளது.

இராணுவ அச்சுறுத்தலால் தமிழர்படும் துன்பத்தை நேரில் பார்வையிடவே இக் குழுவினர் மட்டக்களப்பு விஜயம் செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியாவிற்கு எதிராக சர்வதேச மட்டத்தில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)
சர்வதேச மட்டத்தில் இந்திய அரசுக்கு எதிராக இலங்கைத் தமிழர்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வருகின்றார்களாம்.

சமாதான முயற்சியில் ஈடுபட்ட புலிகளின் தளபதி கிட்டுவின் மரணத்திற்கு இந்திய அரசே பொறுப்பென குற்றம் சாட்டி இந்த ஆர்ப்பாட்டங்கள் அங்கு நடைபெற்று வருகின்றன.

பாரீஸ், பொன், லண்டன்,

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு அறிக்கை இறுதிக் கட்டத்தில்

(கொழும்பு)
நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கை இப்போது நகல் வடிவல் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. தேவையான மாற்றங்களுக்காக இந்த நகல் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தெரிவுக் குழுவின் அங்கீகாரத்தின் பின் அடுத்த சில வாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன்பின்பே அடுத்த நடவடிக்கை குறித்து ஆராயப் படுமென அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி-ரி)

## ★ ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய இருபதினாயிரம் தமிழர்களின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(பேர்லின்)
ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள 20,000 தமிழர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அரசியல் தஞ்சம் கோரி போலில் கடந்த 10 வருடங்களாக ஜெர்மனியில் வாழ்ந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமதித்தர் நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ் ரி. மெடிக்கல்ஸ், 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி–7052)

### கரிசலாங்கண்ணி

கரிசலாங்கண்ணி நாற்று ஒன்றைப் பத்து பாவை வெற்றுப் பைக்கற் தந்து பெற்றுக்கொள்ளலாம். ''மில்க் வைற்'' (சி 2819)

## அரிசிக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் அரிசித் தட்டுப்பாடு கடுமையாக ஏற்பட்டுள்ளதனால் ஒரு கிலோ நாட்டரிசி 50 ரூபா விற்கு மேல் விற்கப்படுகிறது.

இம்மாதத்திலிருந்தே அரிசிக்கு குடாநாட்டுப் பகுதியில் பலத்த தட்டுப்பாடு நிலவிவருகிறது. (56)

## கலை நிகழ்ச்சி திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம், யாழ். மாவட்டத்தினரால் கோட்டங்கள் தோறும் நடாத்திவரும் கலை நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாத சில காரணத்தினால் கீழ்க் காணும் ஒழுங்கில் திகதி மாற்றப்பட்டுள்ளது.

21-ம் திகதி யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற விருந்த நிகழ்ச்சி 27-ம் திகதியும், 22ம் திகதி சுட்டிபுரத்தில் நடைபெறவிருந்த நிகழ்ச்சி 26ம் திகதியும், 22ம் திகதி புத்தூர் சோமாஸ்கந்த பாடசாலையில் நடைபெற இருந்த நிகழ்ச்சி 26ம் திகதியும் அவ்வவ்விடங்களில் நடைபெறும்.

இன்று செம்பியன்பற்று புனித செபஸ்தியார் கோவிலடியிலும், 28 ம் திகதி உரும்பராய் சைவத்தமிழ் பாடசாலையிலும், 30 ம் திகதி நாகர்கோவிலடியிலும் நடைபெறவுள்ளது.

## இராசி பலன்

25-01-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு தை 12)

திருதியை வைகறை 5-40 வரை. சதயம் முழுவதும் சித்தயோகம் இராகுகாலம் காலை 8-06 முதல் 9-36 வரை, சுபநேரம் நண்பகல் 12-36 முதல் 2-06 வரை.

மேடம்: இசைத்துறை ஈடுபாடு, கல்வி ஞானம், குடும்ப சுகம்.

இடபம்; அதிகமான திறமை, தொழில் பெருமை, பணவரவு.

மிதுனம்: பாசப் பிரிவினை, மனசங்கடம், அலைச்சல்.

கடகம்; வீண் வாதம் தொழில் கஷ்டம், நம்பிக்கையின்மை.

சிங்கம்: உயர்ந்த நிலை, கர்வம், காரியசித்தி.

கன்னி: இனசன மகிழ்ச்சி தொழில் சிறப்பு, விவேகம்.

துலாம்: பெண்பகை, சகோதரர் முரண்பாடு, யோசனை.

விருச்சிகம்: ஆரோக்கிய பாதிப்பு, வாழ்க்கை வெறுப்பு, காரியதடை.

தனுசு: கருத்து முரண்பாடு, சிறுபயணம், சுபநிகழ்வு.

மகரம்: மனைவியுடன் மனக்கசப்பு, வாக்குப்பகை, தெய்வீக செலவு.

கும்பம்: எதிர்நீச்சல், தொழில் சிறப்பு, புத்திரா உதவி.

மீனம்: மந்தநிலை, காரியம் கைகூடாமை, ஏமாற்றம்.

- ஜோஸ்யர்

## மட்டபாண்ட தொழிற்சாலை: மூடிவிடக் கோரிக்கை

யாழ்ப்பாணம்!

கடந்தஇரண்டரை வருடங்களுக்கு மேலாக செயலிழந்து இருக்கின்ற ஒட்டுசுட்டான் மட்பாண்டத் தொழிற்சாலையினை அரசு மூடிவிட தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் 91ம் ஆண்டு ஜனவரிமாதம் தொடக்கம் தென்பகுதியிலுள்ள ஒட்டுமட்பாண்டத் தொழிற்சாலைக்கு சென்று கடமையாற்றும்படி அறிவித்தபோதும் இதனை ஊழியர்கள் ஆட்சேபித்து அங்கு செல்ல மறுப்புத் தெரிவித்திருந்தனர். இதனால் இடமாற்றம் அரசினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

இத்தொழிற்சாலையில் கடமையாற்றும் 65 பேரும் எதுவித சம்பளமுமின்றி கஷ்டப்பட்ட நிலையில் உள்ளனர். (56)

## சுவாமி விவேகானந்தரின் ஜயந்தியையொட்டிய கருத்தரங்கு

29-1-93 வெள்ளிக்கிழமையன்று பாடசாலைகளில் பயிலும் கல்விப் பொதுத் தராதர சாதாரண/உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் காலை 8-30 மணி தொடக்கம் மதியம் 12-30 வரைக்கும் ஒரு ஆத்மீகக் கருத்தரங்கு நடைபெறும்.

கருத்தரங்கு விடயங்கள்:

- ★ சிக்காக்கோ சர்வமத மகாசபையில் சுவாமி விவேகானந்தர்
- ★ சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண விஜயம்
- ★ சுவாமி விவேகானந்தர் ஒரு தீர்க்கதரிசியா?
- ★ சுவாமி விவேகானந்தர் ஒரு நவீன சந்நியாசி

29-1-93 காலை 8 30 மணிக்கு ஆரம்பம்

காலை 8-40 பிரார்த்தனை

தலைவர்: திரு. ச. செல்லத்துரை (பிரதிக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி)

காலை 9-15 ஆய்வுரை

கலாநிதி நா. ஞானகுமாரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், மெய்யியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

காலை 10-15 இடைவேளை

காலை 11-00 சிறப்புரை

சுவாமி சித்ரூபானந்தா

காலை 11-45 சந்தேகம் தெளிதல்

நடுவர்: சுவாமி சித்ரூபானந்தா

மதியம் 12-30 மங்களம்

கல்லூரி மாணவர்கள் பங்குகொள்வதை வரவேற்கிறோம்.

(ஏ 2810)

## பராமரிப்பாளர் பதவிக்கான வெற்றிடம்

யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், பராமரிப்பாளர் பதவிகளுக்கு பின்வரும் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றார். இப்பதவி தற்காலிகமானதும் ஊதியமற்றதும் ஆகும். ஆனால் மாதாந்தம் 375 ரூபா நிலையான படியாக (Allowance) வழங்கப்படும். அத்துடன் வாழ்க்கைச் செலவுப்படியும் சேர்த்து வழங்கப்படும். 18 — 40 வயதிற்கு இடைப்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள். கல்வித் தகைமைகள் 8-ம தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வெற்றிடங்கள் அச்சுவேலி, பருத்தித்துறை, புன்னாலைக்கட்டுவன், கொக்குவில், புத்தூர் ஆகிய மத்திய மருந்தகங்களில் உள்ளதால், அம் மத்திய மருந்தகங்கள் அமைந்துள்ள சுற்றாடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, கல்வித்தகைமை என்பவற்றை உள்ளடக்கியதாக முழுத்தாள் அளவிலான கடதாசியில் நிரப்பப்பட்டு சம்பந்தப்பட்ட மத்திய மருந்தக பதிவு வைத்தியருடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

இப்பதவிக்கு நேர்முகப் பரீட்சைமூலம் தெரிவானோருக்கு எழுத்துப் பரீட்சையும் வைக்கப்படும்.

இவ் விண்ணப்பங்கள் 06-02-93 திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (எ 2811)

## 5-ம் வருட நினைவு

தாயின் மடியில்:
28-07-1929



இறைவனடியில்:
26-01-1983

### அமரர் முடியப்பு லிகோறி

இரக்கமுள்ள யேசுவே!


தேவரீர் எம்மிடமிருந்து அழைத்துக்கொண்ட முடியப்பு லிகோறியை உமது இரக்கத்தினால் அவரின் குறைகளை நிறைவுசெய்து அவர் என்றும் ஆசித்த நித்திய வாழ்வை அவருக்கு அளித்தருளும்படி மன்றாடுகிறோம். ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக 26-01-1993 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றி அவரது ஆத்தும இளைப்பாற்றுக்காக மன்றாடுமாறு வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

மணற்காடு,
குடத்தனை. (கி 7165)

## 75 ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. தம்பிராசா மகேந்திரலிங்கம்

மண்ணில்: 09 04-1968
விண்ணில்: 12-11-1992

நாதம் தந்த வீணை
நரம்பிழந்து போனது போல்
ஓசை தந்த மணி
ஒலி இழந்து போனது போல்
வாசம் தந்த மலர்
வாடியே போனது போல்
பாசம் தந்தவனே
பாதியிலே போயினையோ?

உன்பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா, அக்கா,
அண்ணன்மார், அத்தான்,
மருமக்கள், பெருமக்கள்.

''பிருந்தாவனம்''
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (கி 2820)

# நாவலர்பெருமான்பாராட்டிய பெருந்தகை குமாரசாமிப் புலவர்

சுன்னாகம் குமாரசாமிப் புலவர் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வடமொழி தென்மொழிப் புலமை வாய்ந்த பெரும் புலவராவார். அவர் ஆறுமுகநாவலர் பெருமான் காட்டிய வழி கடைப்பிடித்தொழுகித் தமது வாழ்நாள் முழுவதும் சைவநற்றொண்டும் செந்தமிழ் தொண்டும் செய்து வாழ்வாங்கு வாழ்ந்த பெருந்தகையாளர்.

அவர் செந்தமிழ் வல்லவலாகிய சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் ஸ்தாபித்த ஏழாலைத் தமிழ் வித்தியாசாலையிலும், வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையிலும் நாற்பத்திரண்டு வருடங்கள் தலைமையாசிரியராகப் பணிபுரிந்து மாணவர் பலருக்கு தமிழ் கற்பித்து தமிழ் மொழியின் பெருமையை நாடறியச் செய்த வித்தகர்.

யாழ்ப்பாணத் தமிழ் சங்கத்திலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் வித்துவ அங்கத்தவராக இருந்து தமிழன்னைக்கு பெருமை சேர்த்தவர் தமிழ் மொழியை வளம்படுத்த அறுபதுக்கு மேற்பட்ட செய்யுள் நூல்களையும் வசன நூல்களையும் உரைநூல்களையும் இயற்றி வெளியிட்டார். அவர் செய்த பணியை சேவையை இராமநாதபுரம் சேதுபதியரசர்களும் மதுரைத் தமிழ் சங்கப்புலவர்களும் பிறரும் காலாகாலத்தில் பாராட்டியுள்ளனர்.

புலவர் அவர்களின் வாழ்க்கை ஆரம்ப காலத்தில் மிகக் கஷ்டமாகவே இருந்தது. அவர் தமது இளமைபற்றி இவ்வாறு கூறியுள்ளார். "நான் சிறுவயதில் மல்லாகம் ஆங்கில பாடசாலையில் கல்வி கற்றேன். அங்கு நான் படித்துக் கொண்டிருக்கும்போது நான்காம் வகுப்பில் எனது தந்தையார் என்னைப் பாடசாலை செல்ல வேண்டாமென மறித்துவிட்டார். எனது கல்வி பற்றி யாரும் கவனம் எடுக்கவில்லை. எனக்கு வேண்டிய புத்தகங்களை பலரிடமும் கடனாகவே பெற்றுப்படித்தேன். அப்படியான நேரத்தில் முருகேசு பண்டிதர் எனது கல்விக்கு சலகாலம் உதவினார்.

## இன்று நினைவுதினம்

"ஆறுமுகநாவலர் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த 1870) முதல் அவர் இறக்கும்வரை (1878) யான் அவரிடம் இலக்கணம் இலக்கியம், தருக்கம் ஆகிய நூல்களின் சந்தேகங்களை கேட்டறிந்துவந்தேன். புலவர் அவர்கள் நிறைய 'இலங்கை நேசன்'' பத்திரிகையில் எழுதி வந்த கடிதங்களைப் பற்றியும், கவிதைகள் பற்றியும் நாவலர் பெருமான் எப்போதும் நண்பர்களிடம் பாராட்டி வந்தார். சைவத்தின் மகன் இவ்வாறு புலமை பெற்றிருக்கிறான் என்று குமாரசுவாமிப் புலவரைப் பாராட்டியதுண்டு. நாவலர் சிவபதமடைந்தபோது புலவர் பாடிய இரங்கற்பா கவிநயமிக்கதாக அமைந்தது.

என் கடிதம் என் கவிதை
யார்க்கு மினிதென்று
நன் குறவே பாராட்டும்
நாவலனார் –எங்கேயோ
கவிகைமுடிச்சங்கரன்
பொற்கஞ்சமலர்ச் செஞ்
சரண்விட்டு
இங்கு வரவுங்கருத்தோ
என் – என்பதாகும்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை புலவரிடம் கல்வி பயின்றவர். புலவர் சுகவீனமுற்றிருந்தவேளை தினமும் அவரைப் பார்க்க வந்து சுகம் விசாரிப்பார். புலவருக்கு, இவர் வீடு செல்லாமல் அங்கேயே தங்கி விடுவதெனக் கவலையடைந்து "எனக்குச் சுகம்'' ஆன்று போய் நாளை வாருமென'' அனுப்பிவிடுவார். இறக்கும்போது அவருடன் கூடவே இருந்தார். மரணமானபோது புலவரின் இனிய உறவு பற்றி பண்டிதமணி கணபதிப்பிள்ளை இவ்வாறு கவிதைவடிவில் இரங்கலுரை நிகழ்த்தினார்.

செந்தமிழும் ஆரியமும்
தேர்த்த வீறித்
தேயமெலாம் சென்றிலகும்
கீர்த்தி நன்றே
இந்தநில மிசையிருப்ப
இணையிலாத
எண்ணிறல கவிதழைத்த
இனிய வாயும்
அந்தமிலாக் கலைகள் பல
எழுதி வைத்த
அம்புயநேர் திருக்கரமும்
அந்தோ! அந்தோ
இந்தனத்திற் செந்தழலில்
உருகி வீய
யாமிதனைப் பார்த்திருந்தன்
என்னே! என்னே!

— ஐயா. சச்சிதானந்தம்

# இந்திய அரசுக்கு எதிராக கண்டனக் கூட்டம்

(யாழ்ப்பணம்)

இந்திய அரசின் அழுத்தங்களைக் கண்டித்தும், இந்திய அரசினால் வங்கக் கடலில் வைத்து வீரச் சாவெய்திய கேணல் கிட்டு உட்பட பத்துப் போராளிகளுக்கும் அஞ்சலி செய்யுமுகமாக தமிழீழ கலை இலக்கிய பத்திரிகையாளர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 27-ந் திகதி புதன்கிழமை 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தவிருக்கிறார்கள்.

கூட்டத்துக்கு முன்னர் நாச்சிமார் கோவிலடியில் இருந்து பல்கலைக்கழகம் வரையிலான ஊர்வலம் ஒன்றும் இடம்பெறவிருக்கிறது. (சு)

# புகைப்படக் கலை வகுப்புகள் ஆரம்பம்

(நல்லூர்)

புறநிலைப் படிப்புகள் அலகினால் புகைப்படக்கலை அடிப்படைப் பயிற்சிநெறி ஆரம்ப நிகழ்வு சனிக்கிழமை பிற்பகல் கலைப்பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் ஆரம்பமானது.

பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெற்ற ஆரம்பநாள் நிகழ்வில் பழம்பெரும் புகைப்படக் கலைஞர் பிலிப் மாணிக்கத்தம்பி, நிக்கிலஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சிறப்புரைகளை மகிலிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா சமூகவியல் விரிவுரையாளர் எஸ். சண்முகலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இணைப்பாளர் இரா. சிவச்சந்திரனின் விளக்கவுரையை தொடர்ந்து கலாநிதி ச. கிருஷ்ணராஜா. விரிவுரையாளர் த. ஸ்ரீதரன் ஆகியோரின் விரிவுரைகள் நடைபெற்றன விரிவுரையில் 00 மாணவர்கள் கலந்துகொண்டனர். (158)

## இன்று

(வட்டுக்கோட்டை)

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் இன்று 25ம் திகதி திங்கட்கிழமை காலை 8-30 மணியளவில் வித்தியாலய அதிபர் க. துரைசிங்கம் தலைமையில் சுன்னாகம் குமாரசாமிப் புலவர் நினைவு தினம் கொண்டாடப்படவுள்ளது.

பண்டிதர் திரு. க. உமாமகேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு நினைவுப் பேருரை வழங்குவார். (139)

★

(உடுவில்)

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் நினைவுதினத்தை இன்று திங்கட்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் அதிபர் தலைமையில் கொண்டாடுகின்றனர். (109)

★

(கொழும்புத்துறை)

யாழ். நாயன்மார் கட்டு சனசமூக நிலை மாதாந்த அறிவியலரங்கு (தொடர் 7) இன்று திங்கட்கிழமை மாலை 5-00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அறிவியலரங்கில் "தமிழீழத்தில் சிங்களக் குடியேற்றங்கள்'' என்னும் தலைப்பில் திருமலை யோகேந்திரம் உரையாற்றவுள்ளார். (154)

★

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தால் சைவசமய பாடப் பரீட்சைக்கான பரிசளிப்பு வைபவம் இன்று திங்கட்கிழமை மாலை மூன்று மணிக்கு சரசாலை நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தில் திரு கு. பரராசசேகரம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக தென்மராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார். (154)

★

(திருநெல்வேலி)

யாழ் மாவட்டத்திலுள்ள சகல நல்லூர் திரிசாரணர்களுக்குமான வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (157)

★

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவலர் வீதியிலுள்ள கடையிற்சுவாமி குருவார அன்னசத்திர மடத்தின் புனருத்தாரணம் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் கடையிற் சுவாமி சமாதிச் சிவன் கோவிலில் இன்று திங்கட்கிழமை 25-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

## பகிஷ்கரிக்க கோரிக்கை

(டில்லி)

இந்தியாவின் குடியரசு தினத்தை பகிஷ்கரிக்குமாறு புதுடில்லி முஸ்லிம் மதகுரு முஸ்லிம் மக்களைக் கேட்டுள்ளார்.

குடியரசுத் தினத்தன்று வீடுகளில் கறுப்புக் கொடிகட்டி தமது எதிர்ப்பினை காட்டுமாறும் கேட்டுள்ளார். (சு)

## ராஜீவ் கொலை வழக்கு

(கொழும்பு)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகும்.

இந்தக் கொலை சம்பந்தமான 23 சந்தேக நபர்களும் வேறு சிறைகளுக்கு மாற்றம் பட்டுள்ளனர். (இ)

ளது.

## அமெரிக்க அமைச்சரவை

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள கிளிண்டன் 18 அங்கத்தினர்களைக் கொண்ட அமைச்சரவை ஏற்படுத்தியுள்ளார்.

இவர்களுக்கான பதவிஏற்பு வைபவம் நேற்றுமுன்தினம் வாஷிங்டனில் இடம்பெற்றது (சு)

## டாக்டர்களுக்கு எரிபொருள் வழங்க புதிய நடைமுறை

(பண்டத்தரிப்பு)

யாழ் சுகாதார திணைக்களத்தில் டாக்டர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வமான பிரயாணத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் மோட்டார் சைக்கிள்களுக்கு எரிபொருள் வழங்குவதில் புதிய நடைமுறைத் திட்டம் ஒன்று அடுத்தமாதம் தொடக்கம் மேற்கொள்ளப் படவுள்ளது.

இவர்களின் மோட்டார் சைக்கிள்களையும் அவற்றின் உண்மைபற்றிய தஸ்தாவேஜுகளையும் நேரடியாக பரிசீலனை செய்தபின் எரிபொருளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளது. (72)

# கடந்த வருடம் 3000ற்கும் மேற்பட்டோர் நாய்க்கடிக்கிலக்காகினர்

(யாழ்ப்பாணம்)

1991ம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் மூவாயிரத்திற்கு மேற்பட்டோர் நாய்க்கடிக்குள்ளாகியிருக்கின்றனர்.

இவர்களில் 500க்கு மேற்பட்டோர் விசர்நாய்க்கடிக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ் வைத்தியசாலை தவிர ஏனைய வைத்திய சாலைகளிலும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

விசர்நாய்க்கடிக்குள்ளாகி உரிய சிகிச்சையினைப் பெறுமல் கடந்த வருடம் சிறுவர்கள் உட்பட பலர் மரணமாகியுள்ளனர்:

கிளிநொச்சி- யாழ். மாவட்டங்களில் கடந்த வருடம் விசர்நாய்க்கடிக்குள்ளாகி 35 பேர் மரணமாகியிருப்பதாக சுகாதாரப் பகுதி- வைத்திய சாலை வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. (56)

## விபரங்கள் திரட்டு

(பருத்தித்துறை)

யாழ். உள்ளூராட்சித் திணைக்களம் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாலர் பாடசாலைகள் பற்றிய விபரங்களையும் திரட்டி வருகிறது. திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உதவியுடன் இவ்விபரங்களைத் திரட்டி வருகின்றனர். (52)

## வீடு நீக்கிரை

(கொழும்பு)

சிறுமியொருவரை ஒரு ஆசிரியை ஒன்றரை வருடங்களாக அறையில் பூட்டி வைத்து சித்திரவதை செய்த சம்பவமொன்று கடவத்தையில் இடம்பெற்றுள்ளது.

பொலிசாரினால் மீட்கப்பட்ட 11 வயதுள்ள அந்தச் சிறுமி ராகமை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப ஆசிரியையின் வீட்டுக்கு ஆத்திரம் கொண்ட அப்பகுதி மக்கள் தீவைத்தனர் என்றும் கூறப்படுகிறது. (சு)

# வாந்தி பேதிக்கு 2000 பேர் மரணம்

(டாக்கா)

பங்களாதேஷில் வயிற்றுப் போக்கு நோயினால் 2000 பேர் மரணமாகியுள்ளனர் என்று தெரியவருகின்றது.

மேலும் 15,000 மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பங்களாதேஷின் பிறிதொரு பகுதியில் குளிரினால் 200 பேர் இறந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

தற்போது சம்பள உயர்வு மற்றும் சலுகைகள் கோரி பங்களாதேஷில் டாக்டர்களும், தாதிகளும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். (சு)

## பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகாவித்தியாலயத்தில் க. பொ. த. (உ.த) பரீட்சையில் கணிப்பிரிவில் சிறந்த பெறுபேறுகள்:

சி. இரதிகலா- 2பி, சி எஸ். செ. விநாயகரஜனி- பி, 2சி, எஸ். க. சிவரூபன்- 2சி, 2எஸ். (சு)

★

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மட்டுவில் மகாவித்தியாலயத்திற்குக் கிடைத்த பெறுபேறுகள் வருமாறு:

கலை:- ஏ3பி ஒருவர், ஏபி2சி இருவர், ஏ2சி எஸ் இருவர். பி2சிஎஸ் ஒருவர்.

வர்த்தகம்:- 2பி2சி ஒருவர், பி3சி ஒருவர். (இ)

# புலிகளுக்கு உளவு பார்த்ததாக இருவர் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு கொழும்பில் உளவு பார்த்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிசார் இருவரைக் கைது செய்துள்ளனர்.

கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள நகைக்கடை ஒன்றில் இவர்கள் இருக்கும்போது கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

# 'ஈழத் தமிழரை பாதுகாக்க உலகளாவியரீதியில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்'

## மட்டு. சமாதானக்குழு கோரிக்கை

(மட்டு. நகர்)

இலங்கையிலுள்ள தமிழர்களைப் பாதுகாக்க உலகளாவிய ரீதியில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்று மட்டு சமாதானக்குழுவினர் டென்மார்க் மனித உரிமைகள் குழுவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது மட்டக்களப்பில் தங்கியுள்ள டென்மார்க் மனித உரிமைகள் குழு பிரதிநிதிகள் மட்டு, சமாதானக் குழுவைச் சந்தித்தபோதே அவர்களிடம் மேற்கண்டவாறு கோரும் மகஜரொன்றைக் கையளித்தனர்.

ஈழத்தமிழ் இளைஞர்கள் தமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலையிலுள்ளனர். எனவே தமிழ் மக்களின் இந்த நிர்க்கதி நிலை அறிந்து அவர்களைப் பாதுகாக்க உலக மட்டத்திலிருந்து இலங்கை அரசு மீது அழுத்தம் கொடுக்கப்படவேண்டும் என மட்டு. சமாதானக் குழுவினர் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் போனவர்களில் 4368 பேரின் பட்டியலும் டென்மார்க் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. (மி)

# வறிய விவசாயிகளுக்கு நெற்காணி பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

வறிய விவசாயக் குடும்பம் ஒன்றிற்கு 10 பரப்பு வீதம் 20 குடும்பங்களுக்கு நெல்செய்கைக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சிக் கோட்டத்திலுள்ள கைதடி இணைப்பாளர், வட்டத்தில் நாவற்குழி மேற்கு கிராமிய உற்பத்திக் குழுப் பிரிவிலே இந்தக்காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி கோட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பொ. கந்தன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழககோட்ட இணைப்பாளர் ஆகியோர் காணி வழங்கும் நிபந்தனைப் பத்திரத்தினை ஒப்பமிட்டு வழங்கியுள்ளனர். (ரி)

# பாக். குண்டு வெடிப்பில் 25 பேர் உயிரிழப்பு!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஹைதராபாத் நகரில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இருவேறு குண்டு வெடிப்பு சம்பவங்களில் 25 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர். 70 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சனம்நெரிசல் மிக்க இடங்களில் நடைபெற்ற இக்குண்டு வெடிப்பினால் பல கட்டிடங்களும் சேதமடைந்துள்ளன.

3 நிமிட இடைவெளிக்குள் இரு குண்டுகளும் வெடித்ததாக கூறப்படுகிறது.

சிந்துபாத் நகரில் தனிநாடு கோரிப் போராடும் விடுதலை அமைப்பு ஒன்று இக்குண்டு வெடிப்பை நடாத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. எனினும் இக்குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லையென்றும் கூறப்படுகிறது. (க)

# காஷ்மீர் பிரச்னை: பிரிட்டன் மத்தியஸ்தத்தை இந்தியா நிராகரிப்பு

(புதுடில்லி)

காஷ்மீர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் மத்தியஸ்தம் செய்ய பிரிட்டன் முயல்வதை, இந்தியா நிராகரித்துள்ளது.

சமரசத்தீர்வுக்கு மூன்றும் நாடு ஒன்றை இந்தியா ஏற்க முடியாதென்றும் இருநாடுகளும் நேருக்குநேர் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங் தெரிவித்துள்ளார்.

அணுஆயுத பரவல் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவேண்டுமென்ற பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரின் யோசனையையும் இந்தியா நிராகரித்துள்ளது.

இதேவேளை பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் இந்தியாவுக்கு ஐந்து நாட்கள் விஜயத்தை மேற்கொள்ளும் முகமாக, நேற்று முன்தினம் இந்தியா வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

# எய்ட்ஸ் நோயினால் 12 கோடி மக்கள் பாதிப்பு

(லண்டன்)

'எயிட்ஸ்' வைரஸினால் உலகில் 12 கோடிப்பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த 'எச்.ஐ.வி' வைரஸ் மிகத்தீவிரமாக பரவி வருவதாலும் இதனை கட்டுப்படுத்த மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத நிலையிலும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை கடைப்பிடிக்குமாறும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஆசியாவில் தென்கிழக்கு பிராந்தியத்தில் 'எயிட்ஸ்' பரவும் வேகம் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-மி)

### கிட்டு புறப்பட்டு வந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தக் கப்பலில் ஏறியதும் கப்பல் புறப்பட்டதாம், இதன் நடமாட்டத்தைத் தொடர்ந்து அவதானித்து வந்தே இந்திய உளவுப்பிரிவு இக்கப்பலை வழிமறித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, திரு. பிரபாகரனைச் சந்திக்கும் நோக்கில் யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்ததாக கூறப்பட்ட கப்டன் ஜெயச்சந்திரன் தெரிவித்ததாக ஆந்திர மாநில பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார். (சி-மி)

### ஜேர்மனியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் 5000 தமிழரும் அடங்குவார்கள். இவர்களின் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டன.

அரசியல் தஞ்சம் கோரியோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ள போதிலும் இவர்களை ஜேர்மனி திருப்பியனுப்புமா அல்லது மனிதாபிமான முறையில் இவர்களுக்கு வதிவிட அனுமதி வழங்குமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

இதேவேளை பேர்லின், நோட்றைன், வெஸ்பாலஸ் போன்ற மாநிலங்களில் 8 வருடங்களுக்கு மேல் வாழ்கின்ற இலங்கையருக்கு வதிவிட அனுமதி வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மி)

### இந்தியாவிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சூரிச் உட்பட பல ஐரோப்பிய தலைநகரங்களிலும் மற்றும் கனடா, அவுஸ்திரேலியாவிலும் கிட்டுவின் ஞாபகார்த்தமாக பல ஆர்ப்பாட்ட பேரணிகளும் கண்டனக் கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

கிட்டுவைப் பாராட்டியும், இந்திய அரசைக் கண்டித்தும் இந்த நாடுகளில் துண்டுப்பிரசுரங்களும் பெருமளவில் வெளியிடப்பட்டுள்ளன. கிட்டுவின் முழு உருவப்படங்களும் பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான ஆர்ப்பாட்டங்கள் ஐரோப்பிய நாடுகளிலுள்ள இந்திய தூதரகங்கள் முன்பாகவே நடத்தப்படுகின்றனவாம். (இ)

### குடியிருப்புக்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டது.

இதேவேளை மாதகல் பகுதியிலிருந்து பண்டத்தரிப்பு குடியிருப்பு பகுதிகள் நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (56)

### திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை கடந்த 8-ம் திகதி திருமலைபுல்மோட்டைப் பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடியில் உயர் அதிகாரி உட்பட 14 இராணுவம் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க- சு-ரி)

### தமிழ் அகதிகளுக்கென

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா அரசிடம் கையளிக்கவிருக்கின்றது.

இதேவேளை உலக உணவுத் திட்டத்தின் கீழ் மேற்படி உதவி நிறுவனம் 16 லட்சத்து 2ஆயிரத்து 600 டொலர்களை ஸ்ரீலங்கா அரசிடம் ஏற்கனவே கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வழங்கப்படும் உதவிகள் வடக்கு - கிழக்கு தமிழ் அகதிகளுக்கு சேருமா என்பது பெரும் ஐயப்பாடாகவும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (மி-க)

### "தமிழர் துன்ப

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேணப்படுகிறது என்பதை தாம் நன்கறிந்துள்ளதாகவும் இக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

டென்மார்க் மனித உரிமைகள் குழுவைச் சேர்ந்த டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் நைஸ் ரிக்சர், டென்மார்க் வெளிவிவகார அமைச்சின் 2-வது செயலாளர் பேரினி டினகரகாடர், பேர் ஜிற்றி றென்சம் ஆகியோர் அண்மையில் மட்டக்களப்பிற்கு விஜயம்செய்து மனித உரிமைகள் மீறல்கள் பற்றி ஆராய்ந்தார்கள்.

இவர்கள் மட்டு சமாதானக் குழுவைச் சேர்ந்த அதன் தலைவர் அருட்தந்தை அன்ரன் மாரிஷல், உபதலைவர் அருட்தந்தை மில்லர் ஆகியோர் உட்பட பலரைச்சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்கள். (ரி)

# கிராமசேவகர் நியமனம்

## புள்ளி வழங்குவதில் கட்டுப்பாடு

(நல்லூர்)

அண்மையில் வெளியான கிராமசேவையாளர் பரீட்சைக்குரிய புள்ளிகளின் பிரகாரம் விசேட புள்ளிகளை வழங்குவதற்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வெளியான புள்ளியடிப்படையில் 120 புள்ளிக்கு குறைய எடுத்தவர்களுக்கு இவ்விசேட புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தில் அண்மைக் கால நிகழ்வுகளினால் உயிரிழப்புகள், ஊனமுற்றநிலை ஏற்பட்டால் அதற்கான விசேடபுள்ளி அளிக்கப்படுமென முன்னர் கூறப்பட்டது. எனினும் 120 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளை எடுத்தவர்களுக்கே இந்த விசேட சலுகைப்புள்ளி வழங்கப்படும்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடாத்த திருகோணமலையிலிருந்து உயரதிகாரிகள் யாழ்ப்பாணம் வருவார்கள் எனவும் அறிவிக்கப்படுகிறது. (158)

# மறைந்த போராளிகளுக்கு மறுமலர்ச்சிக் கழகம் அஞ்சலி

(திருநெல்வேலி)

கேணல் கிட்டு உட்பட பத்து போராளிகளின் நினைவுக் கூட்டம், அண்மையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினரால் நடத்தப்பட்டது.

மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவு தினக் கூட்டத்தில், இந்திய அரசின் செயலைக் கண்டிக்கும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து இந்தியாவை நீக்குமாறும் உலக நாடுகளைக் கோரியுள்ள அதேவேளை, தமிழர் பிரச்னையில் தலையிட்டுத் தளபதிகளை அழிப்பதன் மூலம், இந்தியா தனது உள்நாட்டுப் பிரச்னைகளை மூடி மறைப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் தமிழர் மீது திணிக்கப்பட்ட ஒன்றே என்றும், அது தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (157)

# பொது விவாதத்திற்கு சிறிமாவுக்கு அழைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் அபிவிருத்தித்துறை முறைகள் தொடர்பான பொது விவாதம் நடத்துவதற்குத் தேவையான விதிமுறைகள் பற்றியும், விவாதம் பற்றியும் ஆராய்ந்து ஓர் உடன்பாட்டுக்கு வரும் கூட்டத்தில், கட்சித் தலைவர்கள் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும் என அழுத்தமாக வலியுறுத்தி ஜனாதிபதி பிரேமதாசா எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 1, 2, 3ம் திகதிகளில் நடத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து, எதிர்க்கட்சிகளுடன் நேரடி விவாதம் நடத்தத் தாம் தயார் என ஜனாதிபதி ஏற்கனவே அழைப்பு விட்டிருந்தார்.

இந்த அழைப்பைத் திருமதி பண்டாரநாயக்கா ஏற்றுக்கொண்டதை அடுத்தே மேற்படி உடன்பாட்டுக் கூட்டத்துக்கு வருமாறு ஜனாதிபதி அவருக்கு அழைப்பு விடுத்துள்ளார். (இ)

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ வை. சதாசிவஐயர்

தெல்லிப்பழையை பிறப்பிடமாகக் கொண்ட வரும் குருநாதசுவாமி கோவில் பூசகருமாகிய சிவஸ்ரீ வை. சதாசிவ ஐயர் அவர்களின் ஈமக்கிரியைகள் இன்று (25-1-93) திங்கட்கிழமை 10 மணியளவில் நடைபெறும்.

தற்காலிக வசிப்பிடம்:
பருத்திப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

தகவல்:
சிவஸ்ரீ ச. வைத்தியநாதசர்மா,
ச. யோகேஸ்வரசர்மா
(பிள்ளைகள்)

(இ- 7167)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B